# பாஸ்கா 2ஆம் வாரம் - ஞாயிறு

## மூன்றாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

அன்பார்ந்தவர்களே, இந்த ஞாயிறை இறை இரக்கத்தின் ஞாயிறாக கொண்டாட நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். இப்புனித திருப்பலியில் பங்கேற்க வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பான வணக்கங்கள்.

இறைஇரக்கத்தின் வெளிப்பாடே இவ்வுலகம் உண்டானது.

இறைஇரக்கத்தின் வெளிப்பாடே இவ்வுலகை இயங்கச் செய்கின்றது.

இறைஇரக்கத்தின் வெளிப்பாடே நம்மை வாழ வைத்து கொண்டிருக்கின்றது.

இறைஇரக்கத்தின் வெளிப்பாடே நம் வாழ்வின் அற்புதங்களும், அதிசயங்களும் அரங்கேறிக் கொண்டு இருக்கின்றது.

இறைஇரக்கத்தின் எல்லையில்லா வெளிப்பாடே, தம் ஒரே மகனை இவ்வுலகிற்கு கொடுத்தது.

இறைஇரக்கத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும் நாம், அதை பிறருக்குக் கொடுக்க வேண்டும். ஆம், நம் இறுதிநாளில் “சின்னஞ்சிறியவர்க்கு செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்”, என நம்மை அவரின் வலப்புறம் அமர வைக்கும் பேற்றினை நாம் பெற முடியும். இல்லையெனில், ஏழை இலாசருக்கு இரக்கம் காட்ட மறுத்த செல்வந்தனைப் போல, நாமும் எரிநரகம் செல்வது உறுதி. இலவசமாகப் பெறுகின்றோம்: இலவசமாகக் கொடுப்போம்.

இன்றைய நற்செய்தி, நமக்குத் தரும் சிந்தனை,

முதலாவதாக, தோமாவின் வலுவின்மையில் இறைவனின் வல்லமை சிறந்தோங்குகின்றது. ஆம். தோமாவின் மனம் சற்றே தடுமாறினாலும், இறுதியில் உயிருள்ள இறைமகனைக் கண்டு கொண்டதன் வழியாக, இறைமகனே “மீட்பர், மெசியா” என்ற மறையுண்மையை நமக்கு ஆழமாக உணர்த்துகின்றது.

இரண்டாவதாக, இறைமகன் இவ்வுலகிற்கு வந்தபோது அமைதி பாடப்பட்டது. அவரின் உயிர்ப்பிலும் அமைதி பொழியப்படுகின்றது. இன்றைய காலக்கட்டத்தில் எங்கும் வன்முறை, மதவெறி, பயங்கரவாதம், தீவிரவாதம், போன்ற பல அச்சுறுத்தல்கள் மாந்தர்களிடையே அமைதியை சீர்குலைத்துக் கொண்டிருக்கின்றது. குடும்பம், சமூகம், நாடு என அவனியெங்கும் அமைதியற்ற நிலையே மேலோங்கி நிற்கின்றது. உயிர்த்த கிறிஸ்து கொண்டு வந்த அமைதியை, அவரின் உயிர்மூச்சையும், சாயலையும் தாங்கியுள்ள நாம், அந்நிலையை மாற்றி, “அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்” என்ற இறைவார்த்தைக்குரியவர்களாக, அமைதியின் தூதுவர்களாக வாழ்ந்திட, அருள் வேண்டி, இத்தெய்வீகத் திருப்பலியில் இணைவோம்.

### முதல் வாசக முன்னுரை (திருத்தூதர் பணிகள் 5:12-16)

அன்பர்களே, இன்றைய முதல் வாசகம், கிறிஸ்துவின் திருத்தூதர்கள் வழியாக நிகழ்ந்த அருஞ் செயல்களைப் பற்றி எடுத்துரைக்கிறது. திருத்தூதர்கள் செய்த அற்புதங்களால் ஏராளமான ஆண்களும் பெண்களும் ஆண்டவரில் நம்பிக்கை கொண்டு, இயேசுவின் சீடர்களானதை நாம் காண்கிறோம். திருத்தூதர்கள் மீது

மக்கள் கொண்ட நம்பிக்கையால், பேதுருவின் நிழல் பட்டவர்கள் கூட நலமடைந்த நிகழ்வு, நாம் கடவுள் மீதும் அவரது பணியாளர்கள் மீதும் எந்த அளவுக்கு நம்பிக்கை கொண்டிருக்கிறோம் என்பதை சிந்திக்க அழைக்கிறது. நாமும் ஆண்டவரில் முழு நம்பிக்கை கொண்டவர்களாய் வாழும் வரம் வேண்டி இந்த வாசகத்திற்கு கவனமுடன் செவிகொடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை (திருவெளிப்பாடு 1:9-13,17-19)

அன்பர்களே, இன்றைய இரண்டாம் வாசகம், மானிட மகனின் மாட்சியைப் பற்றிய யோவானின் சான்றை எடுத்துரைக்கிறது. கிறிஸ்துவின் ஆட்சியுரிமையில் பங்குபெறும் பொருட்டு அவரது வேதனைகளில் பங்கு பெற்றவராக யோவான் தன்னை சுட்டிக்காட்டுகிறார். நாமும் கிறிஸ்துவோடு இணைந்து வாழ அழைப்பு விடுக்கிறார். எப்பொழுதும் வாழ்பவரும், சாவின் மீதும் பாதாளத்தின் மீதும் அதிகாரம் கொண்டிருப்பவருமான ஆண்டவரில் நம்பிக்கை கொள்ள நாம் அழைக்கப்படுகிறோம். என்றென்றும் வாழும் கிறிஸ்து இயேசுவுக்கு சான்று பகரும் வரம் வேண்டி இந்த வாசகத்திற்கு கவனமுடன் செவிகொடுப்போம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. “இதோ! உலக முடிவுவரை நான் உங்களோடு இருப்பேன்” என்ற எம் ஆண்டவரே,

நாங்கள் உலக மாயக்கவர்ச்சிகளில் மதிமயங்கி, சிற்றின்ப நாட்டங்களில் மூழ்கியவர்களாக, உயிருள்ள தெய்வமாக நீர் நற்கருணையின் வழியாக எங்களோடு என்றும் இருக்கின்றீர் என்பதை உணராது,, உம்மை விட்டு விலகி நிற்கும் மனநிலையை மாற்றி, உம் இறைப்பிரசன்னத்தில் உம்மோடிருந்து, உம்மை என்றும் எங்கள் உள்ளத்தில் இருத்தி, உம்முடன் என்றும் பயணிப்பவர்களாக வாழும்; மனதினைத் தந்தருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. “உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்” என்ற எம் ஆண்டவரே,

உயிர்த்த உம்மைப் பற்றிய நற்செய்தியை உலகெங்கும் சென்று அறிவித்த சீடர்களைப்போல, நாங்களும் உம்மை எல்லாருக்கும் எடுத்துரைக்கவும், உலகெங்கும் நற்செய்தி அறிவிக்கும் பணியில் தம்மையே அர்ப்பணித்திருக்கும் மாந்தர்களுக்கு நல்ல உடல், உள்ள நலன் தந்து, அவர்கள் பணிக்கு எவ்வித தடையும், இடையூறும் இல்லாது, ஆபத்துக்களும் இல்லாது, நீரே கோட்டையும், அரணுமாக அவர்களைப் பாதுகாத்து, வழிநடத்தியருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.;

3. “என் அன்பில் நிலைத்திருங்கள்” என்ற எம் ஆண்டவரே,

உறவுகளை இழந்தும், உறவுகள் இருந்தும் யாருமற்றவர்களாக குடும்பம் மற்றும் சமூகத்தால் ஒதுக்கி, ஓரங்கட்டப்பட்டு வாழும் மாந்தர்களை உம் பேரன்பினால் நிரப்பியருளும். அவர்களின் உள்ளத்தில் உள்ள வெறுமையை, தனிமை உணர்வை, வாழ்வின் மீதுள்ள அவநம்பிக்கையை மாற்றியருளும். அவர்கள் வாழ்வில் உமதன்பை உணர்ந்து தன்னம்ப்பிக்கை மற்றும் துணிவுடன், தங்கள் வாழ்வை முன்னேற்றப்பாதை நோக்கி பயணித்திட, வளமான வாழ்வைப்

பெற்றிட வரமருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. "நீதியின்பால் பசி, தாகமுள்ளோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்" என்ற எம் ஆண்டவரே,

நாங்கள் வாழும் இச்சமூகத்தில் பொய்மையும், போலித்தனங்களும், ஏமாற்றுதல்களும், அநீதிகளும் அகோரமாக தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றது. இதைக் கண்டும் காணாதவர்களாக, காதிருந்தும் செவிடர்களாக, மனமிருந்தும் மரத்துப் போனவர்களாக, தன்னலத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நீதியின் தேவனாகிய உம்மை வழிபடும் நாங்கள் இத்தகைய இழிவான மனநிலையை அகற்றி, உம்மைப்போல், தவற்றினைச் சுட்டிக்காட்டி, அநீதியை எதிர்த்து போராடும், பொதுநல மனதினைத் தந்தருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. "நாளைக்காகக் கவலைப்படாதீர்கள், நாளைய கவலையைப் போக்க நாளை வழிபிறக்கும்" என்ற எம் ஆண்டவரே,

அடிப்படை வாழ்வாதாரங்களான உணவு, உடை, இருப்பிடமின்றி வாழும் மாந்தர்கள் பல கோடியிருக்க, தங்கள் வருங்கால சந்ததியினருக்கு பல நூறு கோடி சேர்த்து வைத்து வாழ்ந்திடும் மனிதர்களின் சுயநலப் போக்கினை மாற்றியருளும். தங்களிடம் உள்ளதை, இல்லாதவர்களுடன் பகிர்ந்து வாழும் மனதினைத் தந்தருளும். பேராசையுடன் மண்ணகத்திலே அழிந்து போகும் செல்வம் சேர்க்காமல், விண்ணகத்தில் செல்வம் சேர்ப்பவர்களாக, சிற்றின்பத்தை விடுத்து, விண்ணக பேரின்பத்தை கண்முன் வைத்து, மனிதநேயத்துடன், மனித மாண்புடன் வாழ்ந்திடும் நல்இதயத்தைத் தந்தருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com